வரையறுக்கப்பட்ட யூத் சேர்விஸஸ் (தனியார்) கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாரளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வரையறுக்கப்பட்ட யூத் சேர்விஸஸ் (தனியார்) கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 01**

(i) நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம், கம்பனி பொறுப்புகளுக்கு எதிராக சொத்துக்களினை எதிரீடு செய்யக்கூடாது, ஆனால் தேசிய இளைஞர் சேவை மன்றத்திடமிருந்து பெற வேண்டிய கடன் மீதியொன்றுக்கு எதிராக ரூபா 150,000 நீண்டகால நிஸ்கோ (Nisko) கடன்மீதி எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 138 ஆம் பந்தியின் பிரகாரம், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசம், அதன் செயற்பாடுகளின் தன்மை மற்றும் செயற்பாடுகள், தாய்க் கம்பனியின் தன்மை மற்றும் அதன் வாழ்க்கை நீளம் போன்ற தகவல்களை வெளிப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 16**

நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமையினால், முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 6,879,936 பெறுமதியான 19 சொத்துக்களின் வகைகள் மேலும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அதற்கமைய, இலங்கை கணக்கீட்டு நியமம் 08 உறுப்புரைகளின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவினை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 19**

நியமத்தின் 139, 140 மற்றும் 141 ஆம் பந்திகளின் உறுப்புரைகளின் பிரகாரம் கம்பனியினால் அமுல்படுத்தப்பட்ட ஊழியர் நலன்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் வேண்டப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 24**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 47,022,904 கடன் மீதி மற்றும் மன்றத்தின் வளாகத்தினுள் கம்பனியினால் நடாத்தப்பட்ட நிர்வாகம் மற்றும் வியாபார செயற்பாடுகள் மற்றும் எவ்வித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளாது பயன்படுத்தி ஏனைய வளங்கள் போன்ற தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அந்த ஆண்டுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களில் வரவு ஒன்றாக காட்டப்பட்டிருந்த 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கொன்றிலுள்ள ரூபா 1,951,513 மேலதிகப் பற்று அந்த வங்கிக் கணக்கிற்கு ரூபா 3,903,026 தொகையொன்றை செலவு வைப்பதன் மூலம் நாளேட்டு பதிவொன்றினால் மீளாய்வாண்டில் திருத்தப்பட்டிருந்ததுடன் நடைமுறை வருடத்தின் வருமானக் கூற்றுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 3,903,026 தொகையொன்றினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியினால் கடந்த 04 வருடங்கள் காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுத்தப்படுத்தல் சேவைகளுடன் தொடர்புடைய ரூபா 641,853,060 கூட்டுத்தொகையான பற்றுச் சீட்டுக்களின் பெறுமதியொன்று கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய வாடிக்கையாளர் ரூபா 616,616,929 தொகையொன்றை உண்மையாக செலுத்துவதற்கு இணங்கியிருந்தமையால் கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 25,236,131 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் பாதுகாப்பு மற்றும் சுத்தம் செய்யும் சேவைகளிலிருந்தான வருமானம் ரூபா 1,723,657 இனால் மிகையாகக் கணக்கிடப்பட்டமை முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய வருமானம் ரூபா 1,026,041 தொகை நடைமுறை ஆண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டமை காரணமாக, மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 2,749,698 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) கம்பனியின் ஊழியர்களுக்கான பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

கம்பனியில் கிடைக்கக்கூடிய தகவல்களின் பிரகாரம், 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திலிருந்து பெறவேண்டிய கடன் மீதி ரூபா 45,148,216 தொகையாகக் காணப்பட்டவேளை மன்றத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 305,790 தொகையாகக் காணப்பட்டமையால், ரூபா 44,842,426 இணங்கானப்படாத வித்தியாசமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறவேண்டிய பெறுமதி சேர் வரி (வீஏரீ) மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி முறையே ரூபா 532,581 மற்றும் ரூபா 2,172,555 தொகை 04 வருடங்களுக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் மீதி கீழ்கொண்டு செல்லப்பட்டிருந்தது. கம்பனி வீஏரீ(VAT)க்காக பதிவு செய்யப்பட்டிருக்காமையால், அந்த மீதியின் உள்ளதன்மை, அசாதாரணமாகக் காணப்படுகின்றது. ஆனால், அவற்றை திர்ப்பனவு செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 98,155,014 மொத்த கடன்பட்டோர் மீதியில், 36 சதவீதம் 01 வருட காலப்பகுதிக்கு மேற்பட்டதாக காணப்பட்டது. 03 வருடங்களுக்கு மேற்பட்டதாக தொடர்ந்து காணப்பட்ட கடன்களின் பெறுமதி ரூபா 8,400,908 தொகையாகக் காணப்பட்டது. மேலும், அறவிடமுடியாத கடன்பட்டோர் மீதிகளினை விசேடமாக இனங்கண்ட பின்னர் ஐயக்கடன் ஏற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 16 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளினை சமர்ப்பிப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவை கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அவர்களின் பதவிகளுக்கு தேவையான தகைமைகளினைப் பூர்த்தியாக்கியிருந்தனரா என்பதுடன் அவர்கள் போதியளவு கடமைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனரா என்பதை கணக்காய்வில் பரீட்சிக்க முடியாததாகக் காணப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 1,134,335 பெறுமதியான வருமான வரியின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, தொடர்புடைய கணிப்பீடுகள் கிடைக்ககூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | கம்பனியின் அமைப்பு அகவிதியின் 66 ஆம் பிரிவு | கம்பனியின் இயக்குனரொருவராக வருவதற்கு ஆகக்குறைந்தது 100 பங்குகளையேனும் கொள்வனவு செய்ய வேண்டியிருந்த போதிலும், கம்பனியின் தற்போதைய இயக்குனர்கள் எவ்வித பங்குகளினையும் கொள்வனவு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133 ஆம் பிரிவு | கலண்டர் வருடமொன்றிற்கு ஒரு தடவை வருடாந்த பொதுக் கூட்டமொன்று நடாத்தப்படல் வேண்டும். ஆனால், 2015 ஆம் ஆண்டு தொடர்பில் வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கடந்த காலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் திகதி மற்றும் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையினால் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய தகவல் வெளிப்படுத்தப்படவில்லை. |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைகள் செலுத்துகை அதிகாரச் சட்டம் | 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 767 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த ஊழியர்களுக்கு வருடாந்தம் பணிக்கொடைகளுக்கான ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும், 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான 41 நிரந்தர ஊழியர்களுக்கு மாத்திரம் ரூபா 13,794,177 பணிக்கொடைக்கான மொத்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச்சட்டம் | |
| | (i) 10(1) ஆம் மற்றும் 15 ஆம் பிரிவுகள் | 2015 ஒக்தோபரிலிருந்து 2016 மார்ச் வரையான 06 மாத காலப்பகுதியின் போது சேவையிலுள்ள ஊழியர்களின் 11 சதவீதம் தொடர்பான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்புக்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 47 ஆம் மற்றும் 49 ஆம் பிரிவுகள் | ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்புக்களினைக் கணிப்பிடுகையில், இடைக்கால படி மற்றும் விசேட படியினைத் தவிர ஏனைய உழைப்புக்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும். இது தொடர்பில் பாதுகாப்பு சேவைகள் தொழிற்துறை தொடர்பில் ஊதியங்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்ட அதி குறைந்த மாதாந்த ஊதியங்களின் மீது மாத்திரம் கம்பனி பங்களிப்புக்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டு தொடர்பில் ரூபா 8,509,233 பங்களிப்பொன்று குறைத்து அனுப்பப்பட்டிருந்தது. |
| (உ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 1ஆம் அத்தியாயத்தின் 2(அ) உப-பிரிவு மற்றும் 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் 2(இ) உப-பிரிவு | சேவைகளினை விநியோகிக்கின்ற கம்பனி வரிகளின் செலுத்துகை அல்லது அவ்வாறான வரிகளிலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டிருப்பதற்கு பெறுமதி சேர் வரிச்சட்டம் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 19,270,251 தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 10,135,082 தேறிய இலாபமொன்றாகக் காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,135,169 அல்லது 47 சதவீத பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 126,600 குறைந்த பெறுமதியொன்றினால் வருமானம் அதிகரித்தமை மற்றும் ரூபா 15,510,999 இனால் செலவினம் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தேறிய இலாபமொன்று சுட்டிக்காட்டப்பட்டது ஆனால் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், ரூபா 4,583,276 மீதி தேறிய காசுப்பாய்ச்சல் எதிர் மறையொன்றாக மாறியது. ரூபா 15,769,847 இனால் கடன்பட்டோர் மீதியின் அதிகரிப்பு இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. கம்பினியில் நடைமுறை விகிதம் 3:1

ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வங்கி மேலதிகப்பற்று மீதி நடைமுறைச் சொத்தின் 19 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 98,155,014 கடன்பட்டோர் மீதி மொத்த நடைமுறைச் சொத்துக்கள் பெறுமதியின் 90 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், கம்பனியின் நிலையான சொத்துக்கள் மொத்தச் சொத்துக்களின் 0.86 சதவீதமான ஆகக்குறைந்த சதவீதமொன்றினை பிரதிநிதித்துவப்படுத்தியது.

கம்பனியின் திரவத்தன்மை விகிதத்தினை பகுத்தாய்கையில், விரைவு விகிதம் 2:6 இனைச் சுட்டிக்காட்டியது, ஆனால், நீண்ட காலப்பகுதியொன்றுக்கு அறவிடப்படாதுள்ள கடன்பட்டோர் மீதிகளினைக் கொண்டுள்ளமையினால் அது திருப்திகரமான மட்டமொன்றில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டில் கடன்பட்டோர்கள் புரள்வு விகிதம் 04 தடவைகளாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 03 தடவைகளுக்கு குறைவடைந்தது. கம்பனியின் சாதாரண கடன் சேகரிப்பு காலம் 30 நாட்களாக காணப்பட்ட போதிலும், உண்மை கடன் சேகரிப்புக் காலம் 122 நாட்களாக இருந்தமையால் மேற்குறித்த பாதகமான நிலைமை மேலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அமைப்பு அகவிதியின் பிரகாரம், கம்பனி அதன் சேவைகளினை 56 பல்வேறு துறைகளின் கீழ் நீடிப்பதற்கு மற்றும் வியாபாரங்களினை மேற்கொள்ள முடியுமாகவிருந்தது. ஆனால் கம்பனியின் ஸ்தாபிப்பின் பின்னர் 35 வருடங்களுக்கு மேல் கடந்திருந்த போதிலும், பத்திரிகை, சிற்றுண்டிச்சாலை, சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகள் எனும் பெயரினையுடைய 04 துறைகளுக்கு மாத்திரம் அதன் வியாபார செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கம்பனி அதன் வியாபார செயற்பாடுகளினை மேம்படுத்துவதற்கு கூட முற்திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றினை கொண்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிள்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பில் கம்பனிக்கு விநியோகிக்கப்பட்ட 19 கணக்காய்வு செலவினங்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் தாமதங்கள் 15 நாட்களில் இருந்து 361 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) கம்பனியின் பல்வேறு நோக்கங்களுக்கு முற்பணங்கள் செலுத்துவதற்கு எவ்வித எல்லையும் காணப்படாததுடன் முறையான பதிவுகள் கூட பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னைய முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் முற்பணமொன்று செலுத்தப்பட வேண்டியதுடன் முற்பணத்தினை தீர்ப்பணவு செய்வதற்கு 07 நாட்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தக் கொள்கையினை புறக்கணித்து முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது. மூன்று சந்தர்ப்பங்களில் சிற்றுண்டிச்சாலையில் பணியாற்றும் பெண் பயிலுனர் எழுதுவினைஞர் ஒருவருக்கு ரூபா 152,739 கூட்டுத்தொகையான தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2015 மே 08 வரை 150 நாட்கள் வரையான தாமதமாக காணப்பட்டிருந்ததுடன், கணக்காய்வில் கணக்காய்வு திகதியிலுள்ளவாறான உதாரணங்களாக மேற்கொள்ளப்பட்டன.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அச்சிடும் அச்சகம், சிற்றூண்டிச்சாலை மற்றும் சுத்தம் மற்றும் பாதுகாப்பு சேவைகளின் விநியோகம் போன்ற வியாபார செயற்பாடுகளினை கம்பனி செயற்படுத்தியிருந்ததுடன் அச்சகம் மற்றும் சிற்றூண்டிச்சாலைகளின் செயற்பாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிட்சிப்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) பதினாறு பதவியணி உறுப்பினர்களினைக் கொண்டமைந்த அச்சகத்தில் 2015 ஆம் ஆண்டின் மொத்த் வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 13,682,281 மற்றும் ரூபா 15,552,247 தொகையாகக் காணப்பட்டமையினால், ரூபா 1,869,966 ஆன நட்டமொன்றினைக் காட்டுகின்றது. உத்தியோகத்தர்களிடையே வேலைகளின் முறையான கடமைகள் மற்றும் தொழிற்பிரிப்பு செயற்பாடுகள் காணப்படாமை, இந்த வியாபார செயற்பாடுகளுக்கு பணியில் அமர்த்தியமை, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் குறைபாடுகள் காணப்பட்டமை, உற்பத்தி நோக்கங்களுக்கு வேண்டப்பட்ட களஞ்சியங்களிலுள்ள மூலப் பொருட்களின் பெறுகைகள் மற்றும் விநியோகம் தொடர்பில் மேற்பார்வையொன்றின் கீழ் முறையான இருப்புப் பதிவேடுகள் பராமரிக்கப்படாமை மற்றும் ஒருவரின் கடமையினை மேற்பார்வை செய்வதற்கு நிறைவேற்று உத்தியோகத்தர் காணப்படாமை போன்றன இந்த நட்டத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வளாகத்தில் செயற்படுத்தப்பட்ட இரண்டு சிற்றூண்டிச்சாலைகளின் வருமானம், செலவினம் மற்றும் இலாபம், முறையே ரூபா 39,895,120, ரூபா 39,632,749 மற்றும் ரூபா 262,371 தொகையாகக் காணப்பட்டது. சேவையில் முகாமையாளர் உள்ளடங்களாக 20 ஊழியர்கள் காணப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டின் போது அவர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளாக ஆண்டின் மொத்த செலவினத்தின் 25 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,713,780 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. சபை வளாகத்தினுள் எவ்வித ஏனைய வியாபார போட்டியாளர்களும் காணப்பட்டமையினால், பிரதான கேட்போர் கூட்டத்தில் தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளினை நடாத்துவதற்கு நாள்தோறும் ஒரு தொகை வெளித்தரப்பு நபர்கள் வருவதனால், அங்கு வியாபார செயற்பாடுகளுக்கு சாதகமானதொரு சூழலொன்று காணப்படுகின்றது. எவ்வாறாயினும், அவ்வாறான சந்தர்ப்பத்தினை முகாமைத்துவம் பயன்படுத்தியிருக்காததுடன் மிகவும் எல்லை இலாபத்தினை உழைப்பதன் மூலம் வியாபாரத்தினை செயற்படுத்தியிருந்தது. இந்த நிலைமைக்கு பின்வரும் செயற்பாட்டு பலவீனங்கள் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

- சிற்றூண்டிச்சாலைக்கான கொள்வனவு, முற்பணங்களின் செலுத்துகைகள் மற்றும் தீர்ப்பனவுகள், விற்பனைகள், வருமானங்களின் சேகரிப்பு மற்றும் நாளாந்த சேகரிப்புக்களினை வைப்புசெய்தல் ஏனையவை என்பன முறையானதொரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படாமை.

- உத்தியோகத்தர்களிடையே கடமைப் பகிர்வுகள் மற்றும் வேலை செயற்பாடுகள் முறையாகக் காணப்படாமையினால், உத்தமமான வினைத்திறனொன்றில் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

- அனைத்து உணவு வகைகளும் பேக்கரி உற்பத்திகளும் உள்வாரியாக மேற்கொள்ளப்பட்டிருக்காது வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முறையான நிதி முகாமையின்றி கம்பனி செயற்பட்டமையினால், அதன் தொழிற்பாடு மூலதன தேவைக்கு உயர் வட்டி வீதங்களின் கீழ் வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டதுடன் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான வங்கி மேலதிகப்பற்றின் பெறுமதி ரூபா 297,288 தொகையாகக் காணப்பட்டது.

## 4.4 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம், ஏனைய அரச நிறுவனங்களினால் பொது முயற்சிகளின் வளங்களினைப் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், சம்பளங்களினை மிளளித்தலின் அடிப்படையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கம்பஹா அலுவலகத்திற்கு கம்பனியின் ஊழியரொருவர் இணைக்கப்பட்டிருந்தார். 2016 மார்ச் 31 வரையில் கம்பனியினால் அவர்க்கு ரூபா 1,447,592 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணத்தினை மன்றம் மீளளித்திருக்கவில்லை.

## 4.5 பதவியணியின் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவலின் பிரகாரம், கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 84 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 16 பதவிகளுடன் தொடர்புடைய 22 வெற்றிடங்களும், 7 பதவிகளில் 12 மிகை பதவியணியினர் மிகையாகக் காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கு முரணாக மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்படாத 04 பதவிகளுக்கு நான்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். அந்த 04 பதவிகளுடன் தொடர்புடைய அடிப்படை தகைமைகளினைக் கூட அவர்கள் பூர்த்திசெய்திருக்கவில்லை.

(ஆ) தெரிவுப் பரிசோதனையொன்றின் பிரகாரம், 13 உத்தியோகத்தர்களில் 7 இற்கு கடமைகளின் முறையான பணிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 6 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 6 உத்தியோத்தர்களின் ஒப்பந்த காலப்பகுதி 2016 ஏப்ரல் 30 இல் கடந்திருந்த போதிலும், கணக்காய்வு திகதியில், அவர்களின் சேவை உடன்படிக்கையொன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காததுடன் புதிய சேவை உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்படாது அவர்கள் தொடர்ச்சியாக வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) புதிய ஆட்சேர்ப்புக்களில் அல்லது பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புகையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், சம பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு சம்பள அளவுகளினை இடுவதன் மூலம் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150 ஆம் பிரவின் பிரகாரம், நிதியாண்டொன்றின் பின்னர் தொடர்ந்து வருகின்ற ஆண்டின் 6 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 149 நாட்கள் தாமதத்தின் பின்னர், 2017 பெப்ரவரி 27 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பந்தியின் பிரகாரம் கம்பனிக்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கை திட்டம்

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிகள் சுற்றறிக்கையின் உறுப்புரைகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்று கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

கும்பனியில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிலிருந்து உள்ளகக் கணக்காய்வொன்று செயல்படுத்த முடியுமென 2013 டிசெம்பர் 03 இல் இடம் பெற்ற சந்திப்பில் பொது முயற்சிகள் குழுவுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அறிவித்திருந்த போதிலும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் கூட உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | கம்பனியின் செயலாற்றல், திட்டங்கள் மற்றும் இலக்குகளுடனான ஒருமைப்பாட்டின் பிரகாரம் வருடாந்த பாதீடு மதிப்பீட்டை தயாரிப்பதற்கு மற்றும் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | கணக்கீடு | ஒட்டுமொத்த நிதிசார் விளைவுகள் மற்றும் கம்பனியின் ஒவ்வொரு வியாபார செயற்பாடுகளின் அனைத்து நிதிசார் விளைவுகளினையும் தனித்தனியாக சுட்டிக்காட்டுவதன் மூலம் போதுமான புத்தகங்கள் மற்றும் நிதிசார் பதிவுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | அவர்களுடைய கடமைகளின் பிரகாரம் பொறுப்புக்களினை குறித்துரைக்கும் வகையொன்றில் வேலைகளின் பிரிப்பு மற்றும் ஒரு உத்தியோகத்தர்களின் வேலை மற்றுமொரு உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும் என்ற வகையொன்றில் எழுத்து மூலமான வேலைகளின் கடமைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கொள்ளவனவுகளின் கட்டுப்பாடு | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் போதுமான பதிவுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | களஞ்சிய பெறுகைகள் மற்றும் விநியோகத்தினை முறையாக உறுதிப்படுத்துவதற்கு மற்றும் பொருட்களின் பாதுகாப்பு தொடர்பில் போதியளவான கட்டுப்பாட்டு முறைமை களஞ்சியத்தில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுபாடு | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்கள் தொடர்பில் மற்றும் காலம் கடந்த மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு துல்லியமான விபரங்களினை வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |